**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No 1/2021** **நாள் 24.03.2026.**

**வாசா 1 , திருமதி . வெள்ளைதாய்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2 ஆம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.**

இந்தியன் வங்கியில் இருந்து என் தாயார் வாங்கிய கடன் தொகையை நாங்கள் 5 பேரும் சேர்ந்து அடைத்தோம் என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. அந்த கடனை நாங்கள் தான் அடைத்தோம் என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள வீடானது என் தகப்பனார் வாசாஆ.1 கிரைய ஆவணத்தின் மூலமாக கிரையம் வாங்கிய சொத்து என்று சொன்னால் அது சரிதான். சாட்சி மீண்டும் தானாகா மூத்த நீராத்துலிங்கம் என்பவர் தன் தகப்பனாரான நீராத்துலிங்கம் பெயருக்கு கிரையம் வாங்கி கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறார். என்னிடம் காட்டப்படும் வாசாஆ.1 ஆவணத்தில் நான் சொல்வது போல் மூத்த நீராத்துலிங்கம் என் தகப்பனார் நீராத்துலிங்கம் பெயருக்கு கிரையம் வாங்கிக்கொடுத்ததாக அதில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் அது சரிதான். வாசாஆ.1 ஆவணமானது பிராது 2ம் அயிட்ட சொத்துக்குரியது என்றும், என் அப்பா தான் பட்டா பெயர் மாற்றம் செய்து சொத்து வரியை செலுத்தி அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். பிராது 2ம் அயிட்ட சொத்தில் தான் ஆரம்பத்தில் நாங்கள் எங்களது பெற்றோர்களுடன் குடியிருந்து வந்தோம் என்று சொன்னால் அது சரிதான். பிராது 2ம் அயிட்ட சொத்தில் என் தகப்பனார் குடியிருந்து வந்த போது 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் அவர் இறந்துபோனார். அதன் பின்பு அந்த வீட்டில் என் தாயார் தான் குடியிருந்து அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு என் தாயார் அந்த வீட்டில் இருந்து அனுபவித்து வந்த சமயத்தில் என்னுடைய கடைசி சகோதரியான வழக்கில் உள்ள லிங்கபவாணி என்பவர் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பாகம் வேண்டும் என்று சொல்லி பிரச்சனை செய்து அவர் ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.129/2000ம் வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான்.அந்த வழக்கில் என் தாயார் பேச்சியம்மாள் 1ம் பிரதிவாதி ஆவார். அந்த வழக்கில் நான் 2ம்எதிர்வாதி ஆவேன். அந்த வழக்கில் என்னுடைய சகோதரிகளான உஷாராணி, மற்றும் வெங்கடரத்தினம் என்பவர்கள் 3, 4 எதிர்வாதிகள் என்றால் சரிதான். இவ்வழக்கில் உள்ள 2ம் வாதியான பார்வதி தேவி என்பவர் அந்த வழக்கில் 5ம் எதிர்வாதி என்றால் சரிதான். அ.வ.எண்.129/2000ம் வழக்கில் தரப்பினார்களாகிய எங்களுக்குள் சமாதானம் ஏற்பட்டது என்றால் சரிதான். அதன்படிக்கு அந்த வழக்கில் இருந்த வாதி லிங்கபவாணி என்பவர் ஒரு சமரச மனுவை தாக்கல் செய்திருந்தார் என்றும் அதனை நான் இவ்வழக்கில் வாசாஆ.3 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ.3 சமரச தீர்ப்பாணையை நாங்கள் அனைவருமாக ஒப்புக்கொண்டோம் என்றால் சரிதான். வாசாஆ.3 ஆவணத்தில் உள்ள 1ம் தபசில்

சொத்தானது மேற்படி வழக்கின் வாதியான லிங்கபவாணி என்பவருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் அது சரிதான். மேற்படி வழக்கில் என் தாயாருக்கு இவ்வழக்கில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள வீடான பிராது 2ம் அயிட்ட சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வீட்டை பொறுத்தமட்டில் அந்த வழக்கில் 2ம் தபசில் சொத்தாக காண்பித்து அதை என் தாயாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் உள்ள 3ம் அயிட்ட சொத்தானதை இவ்வழக்கின் வாதிகளுக்கும், 1, 2 எதிர்வாதிகளுக்கும் பொதுவாக பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நான்குபேருக்கும் அந்த வழக்கு சொத்தை பொறுத்து மொத்தம் 3 வது தபசிலில் 26 அயிட்டங்களை பொதுவில் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.இவ்வழக்கின் பிராது 3ம் அயிட்ட சொத்தானது அந்த வழக்கில் 3 வது தபசில சொத்தில் 16 வது அயிட்டமாக ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி அந்த வழக்கில் 3 வது தபசில் சொத்தில் 16 வது அயிட்டமாக ஒதுக்கப்பட்ட சொத்தை தவிர இதர சொத்துக்கள் அனைத்தும் நாங்கள் நான்கு பேரும் 3ம் நபர்களுக்கு கிரையமாக செய்துகொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். வாசாஆ.3 ஆவணத்தின் 5 வது பாராவில் " அவரவர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர்கள் பட்டா , தீர்வை , வரிவிதிப்பு முதலானவைகளை மாறுதல் செய்து சர்வ சுதந்திர பாத்தியமாய் அனுபவித்து கொள்வது வேண்டியது எனவும் அவரவர்கள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் மற்றவர்களுக்கு எவ்வித பாத்தியமும், உரிமையும், பின் தொடர்ச்சியும் கிடையாது எனவும், உபய வாதிகளும் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறார்கள் " என்று அதில் கண்டுள்ளது என்றால் சரிதான். அதுபோல் பாரா 7ல் " தபசில் சொத்துக்கள் தவிர நம் பொது குடும்பத்திற்கு வேறு சொத்துக்கள் எதுவும் கிடையாது . தபசில் சொத்துக்களில் காணாத உபய தரப்பினர்கள் பெயரில் உள்ள இதர தனித்த சொத்துக்களை எப்போதும் போல் அவரவர் தனிப்பட்ட சொத்துக்களாக அனுபவித்து கொள்ள வேண்டும் எனவும், அதில் மற்றவர்களுக்கு எவ்வித பாத்தியமும், உரிமையும் இல்லை என்றும் உபய வாதிகளும் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறார்கள்" என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரிதான்.மேற்படி வாசாஆ.3 ஆவணத்தின் தீர்ப்பாணை நகல் தான் வாசாஆ.4 என்றால் சரிதான். வாசாஆ.3 மற்றும் வாசாஆ.4 ஆவணங்கள் படி அவரவர்களின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர்கள் தான் அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் அது சரிதான். வாசாஆ.3 மற்றும் வாசாஆ.4 ஆவணப்படிக்கு என் தாயாருக்கு ஒதுக்கப்பட்ட 2 வது தபசில் வீடானதை என் தாயார் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு சொத்து வரி ரசீதுகளை என்தாயார் தான் செலுத்தி வந்தார் என்றால் சரிதான். அதுபோல் 1 வது அயிட்ட சொத்தானதை என் தாயாருக்கு ஒதுக்கப்பட்டு அவர் தனிப்பட்ட முறையில் வைத்து அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு என் தாயார் அனுபவித்து வந்த சொத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் 25.11.2016ம் தேதிய தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக 1 வது தபசில் சொத்தில் இவ்வழக்கில் உள்ள 1, 2 எதிர்வாதிகளுக்கு என் தாயார் 9 ஏக்கர் 73 சென்டும் பிராது 2ம் அயிட்ட சொத்தை

பொறுத்து வீடானதை எழுதிக்கொடுத்துள்ளார் நஎன்று சொன்னால் என் தாயார் அவ்வாறு எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை அதில் உள்ள கையொப்பம் என் தாயார் உடையது அல்ல. 25.11.2016 ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என் தாயார் உடையது அல்ல என்று நான் வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. இந்த சொத்தை தான் வழக்கில் உள்ள 1 , 2 எதிர்வாதிகள் கனரா வங்கியில் அடமானம் வைத்துள்ளார்கள் என்று சொன்னால் அப்படியில்லை. 1, 2 எதிர்வாதிகளுக்கு என் தாயார் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தின் பேரில் அந்த ஆவணமானது ஊர்ஜிதத்தில் வந்ததின் பேரில்தான் 1, 2 எதிர்வாதிகள் கனரா வங்கியில் அடமானம் வைத்துள்ளார்கள் என்றால் அப்படியில்லை. 25.11.2016 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் ஆவணமானதை 1, 2 எதிர்வாதிகளால் கனரா வங்கியில் அடமானத்திற்காக வைத்துள்ளார்கள் என்று சொன்னால் அப்படியில்லை. என்னிடம் காட்டப்படும் 03.08.2017 ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக பிராது 1வது தபசில் சொத்தில் உள்ள மீதம் உள்ள 2 ஏக்கர் 57 சென்டை பொறுத்து 1 , 2 எதிர்வாதிகளுக்கு என் தாயார் செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் சாட்சியானவரால் ஆவணத்தை படித்து பார்த்து அதில் உள்ள கையொப்பம் தன்னுடைய தாயார் உடையது அல்ல என்றும் அதில் என்ன வாசகம் எழுதப்பட்டிருந்தது என்றும் தன் தாயாருக்கு தெரியாது என்றும் , கையெழுத்து போட சொன்னால் தன் தாயார் கையெழுத்து' போடுவார் என்று சொல்லி சாட்சியம் அளிக்கிறார்.அதில் காணப்படும் போட்டோவானது என் தாயாருடையது தான்.மேற்படி 2 செட்டில்மெண்ட் ஆவணங்களும் என் தாயாரால் 1 , 2 எதிர்வாதிகளுக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் இந்த விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றும் தற்போது மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. என் தாயார் அவ்வாறு எழுதிக்கொடுத்த காலத்திலேயே எனக்கு தெரியும் என்று சொன்னால் அப்படியில்லை. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் அடிப்படையில் 1 , 2 எதிர்வாதிகள் தங்களுடைய பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அது சரிதான். மேற்படி வீட்டின் வரி சம்மந்தப்பட்ட ரசீதுகளிலும் 1 , 2 எதிர்வாதிகள் பெயர் மாற்றத்தை செய்துள்ளார்கள் என்று சொன்னால் வீட்டை ஆக்கிரமிப்பு செய்து தான் அவர்களது பெயருக்கு வரிகளை பெயர்மாற்றம் செய்துள்ளார்கள். நான் சொல்வது போல் ஆக்கிரமிப்பு இல்லை என்றும் செட்டில்மெண்ட் படி தான் சொத்து வரி பெயர் மாற்றம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அப்படியில்லை. செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியது பற்றி எனக்கு- 1 ஆண்டுக்குள் தெரியுமா என்று கேட்டால் பக்கத்து இடத்தின் உரிமையாளர் என் தாயார் இறப்பின் போது இவ்வாறு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டிருந்தார். என் தாயார் செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்த தினத்தன்றே எனக்கு தெரியும் என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. மேற்படி

செட்டில்மெண்ட் ஆவணப்படிக்கு 1 , 2 எதிர்வாதிகள் 11.04.2017 ம் தேதியில் கனரா வங்கியில் ஒரு அடமான கடன் பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் அது தவறு. அந்த சொத்தில் தற்போது மின்வேலி உள்ளதா என்று கேட்டால் நான் அந்த இடத்திற்கு போய் பார்த்ததில்லை பக்கத்து நிலத்துக்காரர் மின்வேலி உள்ளதாக சொல்லி தெரியும். இந்த அடமான கடன் மூலமாக தான் மின்வேலி அமைத்தும் 2 போர்வெல்களை போட்டுள்ளார்கள் என்று சொன்னால் என் அம்மாவுக்கு வருமானம் வருவதற்காக வேண்டி தான் 2 போர்வெல்களை போட்டு எலுமிச்சை ,தென்னங்கன்றுகளை வைத்திருந்தார். இந்த அடமான கடன் தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கனரா வங்கியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பிராது 1, 2 அயிட்ட சொத்தானது வழக்கில் உள்ள 1 , 2 எதிர்வாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டு 1 , 2 எதிர்வாதிகளின் தனித்த சுவாதீன அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. கனரா வங்கியானது இவ்வழக்கில் அவசியமான தரப்பினர் என்றும் அதனை சேர்க்காததால் இவ்வழக்கானது நிலைநிற்கதக்கதல்ல என்று சொன்னால் அது சரியல்ல. 1 , 2 எதிர்வாதிகளின் பெயரிலான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று சொல்லி விளம்புகை பரிகாரம் எதுவும் நான் கோரவில்லை என்றால் சரிதான். 1 , 2 எதிர்வாதிகளின் பெயரிலான பட்டாவையும் ரத்து செய்ய நான் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பிராது சொத்துக்கள் அனைத்தும் பொது அனுபவித்தில் உள்ளதாக நான் சொல்வது பொய் என்று சொன்னால் அது சரியல்ல. தாவா சொத்துக்களுக்குள் நான் இது வரைக்கும் சென்றதில்லை. என் தாயாரை வழக்கில் உள்ள 2 ம் எதிர்வாதி தான் கவனித்து வந்தார் என்றும் நான் கவனித்து வரவில்லை என்று சொன்னால் அப்படியில்லை. என் தாயார் 30.07.2020 ம் தேதி இறந்தார். மதுரையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் வைத்து இருதய நோயால் இறந்துபோனார். என் தாயார் இறந்த காலம் முதல் நல்ல மனநிலையிலும் நடமாடக்கூடிய நிலையிலும் இருந்தார் என்றால் அப்படியில்லை என் தாயாருக்கு புற்றுநோய் பாதிக்கப்பட்டிருந்தது. என் தாயாருக்கு 2007 ம் ஆண்டு புற்றுநோய் ஏற்பட்டது. மேற்படி புற்று நோய் குணமடைந்துவிட்டது என்று சொன்னால் புற்று நோய் குணமாகிவிட்டது என்று சொன்னாலும் என் தாயார் மனதளவில் திருப்திபடவில்லை. என் தங்கை 2 ம் எதிர்வாதியானவரும் என் தாயாரிடம் எடுத்து சொல்லியும் மருத்துவரும் எடுத்து சொல்லியும் என் தாயார் மனதளவில் திருப்திபடவில்லை தொடர்ந்து மாதந்தோறும் சிகிச்சைக்கு சென்றுவந்தார். என் தாயாரை மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் இருதய நோய்காக வேண்டி இவ்வழக்கில் உள்ள 2 ம் எதிர்வாதி தான் சேர்த்தார் என்று சொன்னால் அது சரிதான். அப்போது என் கணவருக்கு பைபாஸ் சர்ஜரி நடந்தது. அதனால் என்னால் என் தாயாரை மதுரை அப்பல்லோ மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முடியவில்லை. மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் வைத்து என் தாயாருக்கான இருதய நோய் சிகிச்சை செலவானதை வழக்கில் உள்ள 2 ம் எதிர்வாதி தான் செய்துவந்தார் என்றால் அப்படியில்லை. என்னுடைய கடைசி தங்கையானவர்

அமெரிக்காவில் இருந்து ரூ.8 லட்சத்தை 2ம் எதிர்வாதி பெயருக்கு அனுப்பியிருந்தார் நானும் தொகை ரூ.2 லட்சத்தை கொடுத்திருந்தேன். ரூ.8 லட்சத்தை என் கடைசி தங்கையானவர் அனுப்பியதாக சொல்லும் போது அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் என் தங்கையானவர் இன்னொரு ஆள் மூலமாக வங்கி மூலமாக கொடுத்துள்ளார். அவர் என்னுடைய பெரியம்மாவின் மகன் ஆவார். அவர் பெயர் தங்கராஜ். என் தாயாருக்கு இருதய நோய் ஏற்பட்டு அவரை மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் வைத்து சிகிச்சைக்கான செலவினை என்னுடைய கடைசி தங்கையானவர் தொகை ரூ.8 லட்சத்தை என்னுடைய பெரியம்மாவின் மகன் தங்கராஜ் மூலமாக அனுப்பிவைத்து செலவினை மேற்கொண்டார் என்று தற்போது நான்அளிக்கும் சாட்சியத்தை பொறுத்து நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் என் தங்கையோ நானோ மருத்துவ செலவினங்கள் எதுவும் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டி இருதரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்பட்டது.)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 24th day of March 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.